## பாடம் 1 : **அன்னைத் தமிழே!**

**வகுப்பு : IV**

**பாடம் : தமிழ்**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1.அன்னை + தமிழே - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

விடை: **அன்னைத்தமிழே**

2. பிறப்பெடுத்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

விடை: **பிறப்பு + எடுத்தேன்**

3. மறந்துன்னை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

விடை: **மறந்து + உன்னை**

4. சிறப்படைந்தேன்- இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

விடை: **சிறப்பு + அடைந்தேன்**

5. “என்னில்” என்ற சொல்லின் பொருள்

விடை: **எனக்குள்**

### ஆ. குறுவினா - வினாக்களுக்கு விடையளி

**1. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?**

சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் தமிழ் அன்னை.

AMSKOSAVAPATTY

## இ. சிறுவினா

**1. இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?**

என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னை புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன்.

சொல்லைக் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே.

**2. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுது?**

- என்னை
- அன்னை
- உன்னை

**3. இப்பாடல் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக?**

- கலந்தவளே
- வளர்ப்பவளே

AAMS KOSAVAPATTY

- தந்தவளே
- வளர்பவளே
- கொடுத்தவளே

**4. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியிர் குறிப்பிடுகிறார்?**

அன்னைத் தமிழின் புகழைத் தன் கவிதை மூலம் சொல்ல முடியவில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

AAMS KOSAVAPATTY